**செ. கு. எண்:087** **நாள்: 19.06.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

அறிக்கை –19.6.2017

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், தேவாரம் உள்வட்டம், தேவாரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. திருவேங்கடம் என்பவரின் மகன் திரு முருகன் என்பவர் 10.6.2017 அன்று தனது குடும்பத்தாருடன் தோட்டத்திற்கு காவலுக்கு சென்ற போது, காட்டு யானை தாக்கியதில் திரு முருகன் என்பவரின் மகன் செல்வன். அழகேசன் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், பேலக்கரை கிராமத்தைச் சேர்ந்த திரு. மோட்டப்பா என்பவரின் மகன் திரு. வெங்கடேஷ் என்பவர் 14.6.2017 அன்று வனப்பகுதி வழியாக ஒட்டர்குப்பம் கிராமத்திற்கு சென்று கொண்டிருந்த போது, எதிர்பாராமல் யானை தாக்கியதில், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானை தாக்கி உயிரிழந்த திரு வெங்கடேஷ் மற்றும் செல்வன் அழகேசன் ஆகியோரின் குடும்பத்தினருக்கு குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயர சம்பவத்தில் உயிரிழந்த வெங்கடேஷ் மற்றும் அழகேசன் ஆகியோரின் குடும்பத்தினருக்கு தலா நான்கு லட்சம் ரூபாய் வனத் துறை மூலம் உடனடியாக வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**